

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 24-12-2024

# அம்பேத்கரும் நேருவும் - வரலாற்றின் பக்கங்கள் - 1

**அண்ணல் அம்பேத்கருக்கு ஆதரவாக மாண்புமிகு பிரதமர் மோடியும், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவும் பேசுவதைக் காணச் சகிக்கவில்லை. அம்பேத்கரை நேரு மதிக்கவில்லையாம்! மோடி சொல்கிறார்!**

தான் பிரதமர் ஆனதும், தன்னை வளர்த்து ஆளாக்கிய அத்வானிக்கும், ஜோஷிக்கும் 'அல்வா' கொடுத்தவர் மோடி. தொகுதிகளே தர மறுத்தார்கள். ஆனால், இந்திய நாடு விடுதலை அடைந்தபோது தான் அமைத்த அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சியில் இல்லாத அண்ணல் அம்பேத்கருக்கு சட்ட அமைச்சர் பதவியை வழங்கிய பெருந்தகையாளர்தான் பண்டித நேரு.

காங்கிரஸ் அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சியைச் சேராத நீதிக்கட்சியைச் சேர்ந்த ஆர்.கே.சண்முகத்துக்கு நிதி அமைச்சர் பொறுப்பையும், அகாலி தளத்தைச் சேர்ந்த பல்தேவ் சிங்குக்கு பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பையும், இந்து மகா சபையைச் சேர்ந்த ஷ்யாம் பிரசாத் முகர்ஜிக்கு தொழில் துறை அமைச்சர் பொறுப்பையும் வழங்கியவர்தான் பிரதமர் நேரு.

நிதி - சட்டம் - பாதுகாப்பு - தொழில் ஆகிய நான்கு தூண்களையும் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு வழங்கி அமைச்சரவை அமைத்தவர்தான் பிரதமர் நேரு.

அண்ணல் காந்திக்கும் - அண்ணல் அம்பேத்கருக்கும் கொள்கை ரீதியான முரண்கள் அதிகம் உண்டு என்பதை நாடு அறியும். அவர்கள் இருவருமே இது குறித்து அதிகம் எழுதி இருக்கிறார்கள். அதேநேரத்தில் அம்பேத்கரை அமைச்சராக்கும் நேருவின் முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார் என்பதுதான் இன்றைய காலக்கட்டம் அறிய வேண்டிய மிக முக்கியச் செய்தியாகும்.

அம்பேத்கரின் வரலாற்றை எழுதிய தனஞ்சய் கீர் குறிப்பிடுகிறார்... "நேரு, அம்பேத்கரை அவருடைய அலுவலக அறைக்கு அழைத்தார். சுதந்திர இந்தியாவின் புதிய அமைச்சரவையில் சட்ட அமைச்சராக சேர ஒப்புக் கொள்கிறீர்களா என்று கேட்டார். அம்பேத்கர் அமைச்சராவதற்கு ஒப்புக் கொண்டார். பின்னர் காந்தியிடம் அமைச்சர் பட்டியலை அளித்தார் நேரு. காந்தியும் அதற்குத் தன்னுடைய ஒப்புதலை வழங்கினார். பிரிட்டிஷ் காரர்களிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தை பெற இருந்த காங்கிரஸ் தலைவர்கள் அம்பேத்கருடன் இப்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர்" என்று எழுதுகிறார்.

ஆட்சி அதிகாரம் வந்ததும், யாரையும் கண்டுகொள்ளாமல் போய்விடவில்லை நேரு. அதற்கு முன் அரசியல் முரணோடு இருந்தவர்களையும் அரவணைத்து அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளக் கூடியவராக நேர்மையாளராக இருந்தார் நேரு. அதனால்தான் பா.ஜ.க.வினருக்கு அவரைப் பிடிக்கவில்லை.

'எதற்கு அம்பேத்கர் பேரைச் சும்மா சும்மா சொல்கிறீர்கள், அவர் பெயரைச் சொல்வது பேஷனாகிவிட்டது' என்று மாண்புமிகு அமித்ஷா எரிச்சல் அடைந்து சொன்ன இதே அவையில், அண்ணல் அம்பேத்கர் மறைந்த போது பிரதமர் நேரு ஆற்றிய உரை கண்ணீர் மயமானது மட்டுமல்ல, இந்தியாவின் உச்சியில் போய் நிறுத்திய உரையாகும். அம்பேத்கரின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்ட நேருவாக அப்போது பேசினார் அன்றைய பிரதமர்.

**"பல துறைகளில் முக்கிய சேவை செய்துள்ள டாக்டர் அம்பேத்கர் காலமாகியதை வருத்தத்துடன் அறிவிக்கிறேன். அவருடைய உயர்ந்த குணங்கள், கல்வி கேள்விகள், தமது மனதுக்குப் பிடித்தமானதை நடத்திவைப்பதில் அவர் காட்டிய உறுதி முதலியன குறிப்பிடத் தக்கவை. பல காலமாக முந்தைய முறைகளின் கீழ் அவதியுற்று வந்தவர்களின் விடியலுக்காக அவர் உண்மை உணர்ச்சியுடன் பாடுபட்டார்.**

**இந்திய அரசியல் சட்டத் தயாரிப்பில் அவர் எடுத்துக்கொண்ட பிரதான பங்கை மறக்க முடியாது. அவரது மற்ற பணிகளைவிட இதுவே பல காலம் போற்றப்படும்.**

**ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் தீவிர உணர்ச்சிக்கு அவர் ஒரு சின்னமாக விளங்கினார். இதை நாம் அனைவரும் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.**

**அவர் கலகம் செய்து எதிர்த்த மாசை இந்து சமூகத்திலிருந்து அகற்ற நமது பொது நடவடிக்கைகளிலும் சட்டத்தின் மூலமாகவும் இந்தச் சபையில் இடம்பெற்றுள்ள எல்லா கட்சியினரும் முயன்றுவந்திருக்கிறோம். சட்டத்தின் மூலமாக மட்டும் இதை அடியோடு அகற்ற முடியாது. பழக்க வழக்கங்கள் ஆழ வேரூன்றியவை. ஆனால், தீண்டாமை கடைசிக் கட்டத்தை அடைந்துவிட்டது என்பதில் சந்தேகமில்லை. சட்டமும் பொதுஜன அபிப்ராயமும் இன்னும் உறுதிகாட்டி, அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாள் நெருங்கிவருகிறது.**

**அவருடன் அரசு வேலையில் ஒத்துழைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்கு முன் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால், அரசியல் நிர்ணய சபை வேலையில் நட்பு ஏற்பட்டது. பிறகு அரசில் சேரும்படி அவரை அழைத்தபோது பலர் ஆச்சரியப்பட்டனர். ஆனால், அவர் பொறுப்பேற்று அரசியல் சட்டத் தயாரிப்பு வேலையைச் செவ்வனே நடத்திவைத்தார். அவ்வப்பொழுது சில வேற்றுமைகள் இருந்தன. ஆனாலும் பல ஆண்டுகள், அவருடன் அரசில் சேர்ந்துழைப்பது சாத்தியமாயிற்று. அவர் ஒரு பிரதான புருஷர். அவரது மரணம் நமக்கு வருத்தத்தைத் தருகிறது. அவரது குடும்பத்தினருக்கு சபையின் அனுதாபத்தைத் தெரிவிப்போம்.**

**ஹிந்து சட்ட சீர்திருத்தப் பிரச்சினையில் அம்பேத்கர் எடுத்துக்கொண்ட சிரமத்துக்கும் காட்டிய அக்கறைக்கும் அவர் என்றென்றும் நினைவில் வைத்துக்கொள்ளப்படுவார். தான் வகுத்த ரீதியில் அல்லாமல் பகுதி பகுதியாக ஹிந்து சட்டம் நிறைவேறியதை அம்பேத்கர் கண்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஹிந்து சமூகத்தின் கொடுமைப்படுத்தும் அம்சங்களை எதிர்த்துப் புரட்சியின் சின்னமாக விளங்கியவர், நாடு அவரைப் பெரிதும் நினைவில் வைத்திருக்கும்" என்றார் நேரு.**

**அம்பேத்கரை, சமூகத் தலைவராக அல்ல, அரசியல் தலைவராக அல்ல, கொள்கைத் தலைவராகப் போற்றிப் பேசினார் பிரதமர் நேரு அவர்கள்.**

**தொடரும்**

## நூலுரிமைத் தொகையின்றி

# முத்தமிழறிஞர் கலைஞரின் நூல்கள் நாட்டுடைமை!

## திருமதி. ராஜாத்தி அம்மாளிடம் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அரசாணையை வழங்கினார்!

**சென்னை, டிச. 24 -**

**2024-25ஆம் ஆண்டிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து அரசாணையை திருமதி ராஜாத்தி அம்மாள் அவர்களிடம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார். இந்நிகழ்வின் போது கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்பட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.**

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 188 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 15.32 கோடி நூலுரிமைத் தொகை தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முத்தமிறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 139 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு நாளிது வரை 31 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரியையர்களுக்கு ரூ.3.75 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 22.08.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகையின்றி நாட்டுடைமை செய்யப்படும் என அறிவித்துள்ளார்.

இவ்வறிவிப்பிற்கிணங்க இலக்கிய இலக்கணப் படைப்புகளாகவும் ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி க.ராஜாத்தி அம்மாள் அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கியதற்கான அரசாணையினை 22.12.2024 (ஞாயிற்றுக் கிழமை) காலை 9.00 மணியளவில் அவர்களின் இல்லத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனால் வழங்கப்பட்டது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையொட்டி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (22.12.2024) சென்னை, மைலாப்பூர், சி.ஐ.டி. காலனியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமை ஆக்கப்பட்டதற்கான அரசாணையை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி க.ராஜாத்தி அம்மாள் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (22.12.2024) செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி:-**

முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களுடைய நூல்கள் நாட்டுமையாக்குவதற்காக, முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. அந்த வகையில் அவருடைய அனுமதியோடு, அவரின் உத்தரவின் அடிப்படையில் இன்றைக்கு அந்த அரசாணையை நம்முடைய முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களுடைய துணைவியார் திருமதி. ராஜாத்தி அம்மாள் அவர்களிடத்தில் அரசின் சார்பில் ஒப்படைத்தோம். ஏறத்தாழ பல்வேறு படைப்புகளை தந்தவர். இன்னும் சொல்லப்போனால், பள்ளிப்பரு வத்தில் தான் எழுதத் துவங்கி "மாணவன் நேசன்" என்கின்ற பத்திரிகை கையேடை துவங்கி அதிலிருந்து முரசொலியில் உடன்பிறப்பிற்கான பல்லாயிரக்கணக்கான கடிதங்களை எழுதி இடையில் குரளோவியம், நெஞ்சுக்கு நீதி, சங்கத் தமிழ் போன்ற படைப்புகளை தந்தவர். திரையுலகிலும் முத்திரை பதித்தவர். அதேபோல, 5 முறை இந்த நாட்டின் முதலமைச்சராக பணியாற்றியவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 70 ஆண்டு காலம் தலைவராக பணியாற்றியவர். அப்படிப்பட்ட மகத்தான தலைவருடைய நூல்கள் நாட்டுமையாக்கப்பட்டு, இதுவரை 179 படைப்பாளர்களுடைய நூல்கள் நாட்டுமையாக்கப்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம், அரசின் சார்பில், நிதி வழங்கப்பட்டிருந்தாலும் பாரதியாரை தவிர, இன்றைக்கும், முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களின் குடும்பத்தார்கள் அதற்கு எதுவும் தொகை வேண்டாம் என்று சொல்லிவிட்டு, கட்டணம் இல்லாமல், இன்றைக்கு நிதி இல்லாமல் அந்த படைப்புகள் நாட்டுமையாக்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்த வகையில் அதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்த தலைவர் கலைஞர் அவர்களுடைய குடும்பத்தார் அனைவருக்கும், மரியாதைக்குரிய அம்மா தயாளு அம்மாள் அவர்கள் குடும்பத்தாருக்கும், அதேபோல, அம்மையார் ராஜாத்தி அம்மாள் அவர்களின் குடும்பத்தார் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மற்றும் எழுத்தாளர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி**- மொத்தம் எத்தனை நூல்கள்?

**பதில்** - 179 நூல்கள் - பல்வேறு தலைப்புகளில், நெஞ்சுக்கு நீதி, குறளோவியம், சங்கத்தமிழ் மற்றும் முரசொலியில் தொடர்ந்து உடன்பிறப்பிற்கான கடிதங்கள் இப்படிப்பட்ட அனைத்து படைப்புகளும் இன்றைக்கு நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தனி நபர்கள் பயன்படும் வகையில் திட்டங்களை தந்துள்ளவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## தருமபுரி மாவட்டம் – மருதிப்பட்டியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதம்!

*தருமபுரி, டிச. 24 -*

*தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரை அடுத்த மருதிப்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.8.77 கோடி மதிப்பில் இரண்டு பள்ளிகளுக்கு, நவீன வசதிகளுடன் வகுப்பறை மற்றும் கழிவறை கட்டிடம், கிராமப்புறத்தில் ஐந்து அறிவு சார் மையம் கட்டும் பணியினை தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தொடங்கி வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து 1,721 பயனாளிகளுக்கு ரூ.19.58 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*இந்த கூட்டத்தில் பேசிய அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இப்பொழுதெல்லாம் கிராமத்தில் உள்ள பெண்கள் வீட்டு தேவைகளுக்கான செலவுகளை வாங்க கணவரை எதிர்பார்ப்பதில்லை. தாங்களே கடைகளுக்கு சென்று பொருள் வாங்கிக் கொண்டு மொபைல் மூலம் போன் பே வசதியில் பணம் செலுத்துகிறார்கள். இது எடப்பாடி பழனிசாமிக்கு தெரியவில்லை, அவர் கிராமபுரத்திற்கு போயிருந்தால்தான் இதெல்லாம் தெரியும்.*

*வாச்சாத்தி மற்றும் கலசப்பாடி மலைப்பகுதியில் முதல்முறையாக ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் மட்டும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் சுமார் 2 இலட்சத்து 85 ஆயிரம் குடும்ப தலைவிகள் மாதந்தோறும் ரூ.1000/ மகளிர் உரிமைத்தொகை பெற்றும், விடியல் பயணத் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் தினசரி சுமார் 1 இலட்சத்து 35 ஆயிரம் பெண் பயணிகள் பயணம் செய்தும் பயன்பெற்று வருகின்றனர்.*

*புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், தருமபுரியில் உள்ள கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயிலும் சுமார் 17 ஆயிரம் மாணவிகள் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் 68 கல்லூரிகளில் பயிலும் 6,339 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 58,676 மாணாக்கர்கள் பயன்பெற்றுள்ளனர்.*

*தருமபுரி மாவட்டத்தில் 363 கோடி பயிர்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதில் சுமார் 1.12 இலட்சம் விவசாயிகளும், சுமார் 40 ஆயிரம் விவசாயிகளின் நகை கடன் ரூபாய் 157 கோடி தள்ளுபடி செய்யப்பட்டும் பயனடைந்துள்ளனர். கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் சுமார் ரூபாய் 4218 கோடியில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர்கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில் ஜெயலலிதா, எடப்பாடி உள்ளிட்டோர் ஆட்சி செய்தனர். ஆனால் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு தனி நபர் பயனடையும் வகையில், புதுமைப் பெண் திட்டம், மகளிர் விடியல் பயணம் மற்றும் குடும்ப தலைவிகளுக்கு மகளிர் உரிமைத் தொகை என கழகத் தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் செய்து கொடுத்துள்ளார். இதுதான் சாதனை என அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.*



*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் கி.சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.என்.பி.இன்பசேகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன், பேரூர் கழகச் செயலாளர் முல்லை.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர் திருமதி. வேடம்மாள், பழங்குடியினர் நலன் திட்ட அலுவலர் பி.எஸ்.கண்ணன், அரூர் வருவாய் கோட்டாட்சியர் சின்னசாமி, கைம்பெண் நல வாரிய உறுப்பினர் திருமதி.ரேணுகாதேவி, உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 75-ஆவது ஆண்டைக் கொண்டாடும் விதமாக, மக்களவைச் செயலகம் வெளியிட்டுள்ள சிறப்புக் காலண்டரில், தேசத் தந்தை காந்தி அடிகள், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் படமோ, பெயரோ இடம் பெறவில்லையாமே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; அவர்களின் பெயர்கள் காலண்டரில் வேண்டுமானால் இல்லாமல் போகலாம்; ஆனால் இந்திய மக்களின் கருத்திலிருந்து அவர்களின் பெயர்களை யாராலும் அழிக்க முடியாது.**

**"காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?"**